செ.வெ.எண்: 12

நாள்: 06.02.2017

## தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
## மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, கரூர்

### பத்திரிக்கைச் செய்தி

### ஊரக மற்றும் நகர்புற இளைஞர்/மகளிர்களுக்கு வேலைவாய்ப்பு முகாம்

கரூர் மாவட்டத்தில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் ஊரக மற்றும் நகர்புறப் பகுதிகளில் உள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞர்/மகளிர்களுக்கு கரூர், தாந்தோணி அரசு கலைக்கல்லூரியில் 11.02.2017 சனிக்கிழமை அன்று காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை "இலவச வேலைவாய்ப்பு முகாம்" நடத்தப்படவுள்ளது. மேலும் குளித்தலை அறிஞர் அண்ணா சமுதாய கூடத்தில் 18.02.2017 சனிக்கிழமை அன்று காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை "இலவச வேலைவாய்ப்பு முகாம்" நடத்தப்படவுள்ளது. இதில் குறைந்தபட்ச கல்வித் தகுதியாக 8–ஆம் வகுப்பு படித்தவராகவும், பிற பட்டய, பட்டப்படிப்பு மற்றும் தொழில்கல்வி பயின்றவர்கள் கலந்து கொண்டு தங்களுக்கு ஏற்ற வேலைவாய்ப்பினை தேர்வு செய்து கொள்ளலாம். வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொள்ளும் இளைஞர்/ மகளிர் தங்களுடைய கல்வி சான்று மற்றும் உரிய அசல் சான்றிதழ்களுடன் கலந்து கொண்டு பயனடைய தெரிவிக்கப்படுகிறது.

மேலும், இவ்வேலை வாய்ப்பு முகாமில், அனைத்து தனியார் தொழில் நிறுவனங்களும் கலந்து கொண்டு இளைஞர்கள் / மகளிர்களை நேரடியாக (தங்கள் தேவைகளுக்கேற்ப) வேலைக்கு தேர்வு செய்து கொள்ளலாம். வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொள்ள விருப்பம் உள்ள தனியார் தொழில் நிறுவனங்கள் மட்டும் தங்களது நிறுவனங்களின் பெயரினை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 2–ம் தளத்தில் உள்ள மகளிர் திட்ட அலுவலகத்தில் (அறை எண்.212–ல்) முன் பதிவு செய்து கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்: 04324– 257377,

கு.கோவிந்தராஜ், இ.ஆ.ப
மாவட்ட ஆட்சித்தலைவர்,

/ உண்மை நகல் / உத்தரவுப்படி /

உதவி திட்ட அலுவலர் (நி/க)

வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
கரூர்.

\\Rani\f\c drive\Rani\2016-2017\A2\Job Mela - 2016-17\a2-1174-2016 - Job mela.doc